செய்தி வெளியீடு எண்: 670 18.10.2007

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

## <u>பத்திரிக்கை செய்தி</u>

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனைபொருள் வாரிய பணியாளர்களுக்கு 01.01.2006 முதல் 14 சதவீதம் அகவிலைப்படி வழங்கப்படாமல் நிலுவையாக இருந்தது. பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை கருத்தில் கொண்டு பணியாளர்கள் மற்றும் ஓய்வூதிய தாரர்களின் நலனை கருதியும் வரும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியாக கொண்டாடும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அனுமதியுடன் மாண்புமிகு கதர் துறை அமைச்சர் திரு.கா.இராமசந்திரன் அவர்கள் நிலுவையாக உள்ள 14 சதவீத அகவிலைப்படியினை 1.07.2007 முதல் வழங்கிட ஆணை வழங்கியும் மேற்படி நிலுவைத் தொகைக்கான காசோலையினை 17.10.2007 அன்று வாரிய தலைமைச் செயல் அலுவலர் அவர்கள் முன்னிலையில் பணியாளர்களுக்கு வழங்கினார். அகவிலைபடி உயர்வினால் 1898 வாரிய பணியாளர்களும், 2155 ஓய்வு பெற்ற பணியாளர்களும் பயனடைகின்றனர் இதனால் வருடத்திற்கு ரூ.3.36 கோடி வாரியத்திற்கு கூடுதல் செலவினம் ஏற்படும். இந்த நிலுவைத் தொகை கிடைக்க பெற்றதால் வாரிய பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் அனைவரும் மிகுந்த நன்றியுணர்வுடன் மகிழ்ச்சியினை தெரிவித்தனர்.

*வெளியீடு, இயக்குநர்,*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*தலைமைச் செயலகம், சென்னை-9.*